No.C.09/2024 22.04.2024

# உலகத் தொழிலாளர் நாள் - மே 1, 2024

**இறை இயேசுவில் அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே!**

கடவுளின் அன்பும் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பின் பரிந்துரையும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக! உங்கள் குடும்பத்திற்காகவும் நம் சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும் உளமார நன்றிச்சொல்லி உழைப்பினால் உயர்வுபெற வாழ்த்துகின்றேன்.

## உழைப்பும் மனிதரின் மாண்பும்

தொழிலாளர்களை நன்றியோடு நினைவுகூர்ந்து அவர்களின் மாண்பையும் உரிமைகளையும் வலியுறுத்துகின்ற நாளாக மே நாள் அமைந்துள்ளது. மனிதரையும் உழைப்பையும் பிரித்துப்பார்க்க இயலாது. அனைத்தையும் உண்டாக்கியக் கடவுள் தன்னை ஓர் உழைப்பாளியாக நமக்கு உணர்த்தினார். அவர் படைத்த முதல் பெற்றோர் ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தைப் "பண்படுத்தவும் பாதுகாக்கவும்" (தொநூ 2:15) அவர்களை தனது உடன் உழைப்பாளர்களாக நியமித்தார். தன் தந்தையான யோசேப்புடன் தச்சுத் தொழில் செய்த இயேசு தொழிலாளர்களின் தோழனாகவே தன்னை நிலைநிறுத்தினார் என்பதை நற்செய்தி நூல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இயேசுவின் அடியொற்றி 1891 இல் திருத்தந்தை பதிமூன்றாம் லியோ அவர்கள் எழுதிய "மூலதனமும் உழைப்பின் உரிமைகளும்" (Rerum novarum) என்னும் கடிதம், 1981 இல் திருத்தந்தை இரண்டாம் ஜாண்பால் அவர்கள் எழுதிய "உழைப்பும் உடற்பயிற்சியும்" (Laborem exercens) என்னும் திருத்தூது மடல் என திருஅவை தொழிலாளர்களின் நலன் காக்கும் சமூகச் சிந்தனைகளை தொடர்ந்து முன்வைத்து வருகிறது. தொழிலாளர்களை பொருள்களாகவும் வேலை செய்யும் இயந்திரங்களாகவும் கருதுவதைத் தவிர்த்து தொழிலாளர்களின் குடும்ப நலன், போதுமான ஓய்வு, உழைப்பின் மேன்மை, பாதுகாப்பான சூழல் ஆகியவற்றை திருஅவை தனது படிப்பினைகளில் வலியுறுத்துகிறது. கடந்த ஆண்டு மே தின மறையுரையில் "உழைப்பில்தான் மனித மாண்பு அடங்கியிருக்கிறது; உழைப்பதால்தான் மனிதர்கள் மாண்பு பெறுகின்றனர்" என திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

## தொழிலாளர்களின் வாழ்வுரிமைப் போராட்டம்

போராட்டங்களால் நிறைந்தது உழைக்கும் மக்களின் வாழ்க்கை. அதே வேளையில் தொழிலாளர்களின் துணிச்சலான போராட்டங்களே பல மாற்றங்களை உலக அளவில் சாத்தியமாக்கியிருக்கின்றன. ஏழை, எளிய, சாமானிய, உழைக்கும் மக்களின் போராட்டங்கள் பல நூற்றாண்டுகள் வரலாற்றினைக் கொண்டது. 1886 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரிலும் பிரான்சு நாட்டின் தலைநகர் பாரிசிலும் தொழிலாளர்கள் வீதிக்கு வந்து தங்கள் உரிமைகளை வலியுறுத்தி தொடர் போராட்டங்களை முன்னெடுத்தது அவற்றில் குறிப்பிடத்தக்கது. உழைப்பினை நாள்முழுவதும் சுரண்டி தொழிலாளர்களைக் கொத்தடிமைகள்போல் நடத்திய முதலாளிகளையும் அரசுகளையும் கண்டித்து எட்டுமணி நேர வேலை, தொழிலாளர்களின் பாதுகாப்பு போன்றவற்றை முன்னிறுத்தி அவர்கள் போராடினர். அதன் விளைவாக ஒவ்வொரு நாடும் தொழிலாளர்களின் நலனுக்காக பல்வேறு சட்டங்களை இயற்றத் தொடங்கின.

## இந்தியாவில் தொழிலாளர்களின் நிலை

நமது நாடு சுதந்திரம் பெற்ற உடனேயே 1948ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேர வேலை, குறைந்தபட்ச ஊதிய வரையறை என இந்தியாவில் சட்டங்கள் இயற்றப்பட்டன. இருப்பினும் அதிகரித்துக் கொண்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், வேலையை இழந்து நிற்கும் பல்லாயிரம் பேரின் பரிதாபமான நிலை, குறைவான ஊதியம், பாதுகாப்பற்றச் சூழல், பணியிடங்களில் நிகழும் விபத்துகள், குழந்தைத் தொழிலாளர்கள், குலத்தொழில் முறையை மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகள், பெரும் வணிக நிறுவனங்களால் காணாமற்போகும் சிறுகுறு வியாபாரிகள், தொழிலாளர் விரோத சட்டங்கள், பருவநிலை மாற்றம், புலம்பெயர்தல் என உழைக்கும் மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகள் ஏராளம். 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தியாவின் வட மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு சுமார் 35 இலட்சம் தொழிலாளர்கள் புலம் பெயர்ந்து வந்துள்ளதாக அறியப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளில் இந்த எண்ணிக்கை பல மடங்காக உயர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எங்குப் பார்த்தாலும் வட மாநில தொழிலாளர்களை நம் பகுதிகளில் காணமுடிகிறது என்னும் மெய்மை தொழிலாளர்கள் நிலை பற்றிய பல கேள்விகளை எழுப்புகிறது.

வேளாண் சட்டங்களால் விவசாயிகளின் வாழ்வு நம் நாட்டில் போராட்டக் களமாக மாறிவிட்டதை நாம் அறிவோம். 2022ஆம் ஆண்டில்

மட்டும் 11,290 விவசாயிகள் இந்தியாவில் தற்கொலை செய்துள்ளனர் என்கிற தரவு நம்மை அதிர்ச்சியுறச் செய்கிறது. அதைப்போல் நூற்றுக்கணக்கான மீனவர்களின் உயிரை பேரிடர் நேரங்களில் பறிகொடுத்தப் பின்பும் கடலில் காணாமல் போகும் மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான எந்த வசதியும் அரசால் இதுவரை நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் செய்யப்படவில்லை என்பதும் வேதனையான ஒன்று.

## கோட்டாறு மறைமாவட்ட தொழிலாளர் பணிக்குழு

தொழிலாளர்கள் தாங்கள் சந்திக்கும் பிரச்சனைகளைக் குறித்து விழிப்புணர்வு அடைவதற்கும் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் பல்வேறு சங்கங்களாக இயக்கங்களாக உலகெங்கும் செயல்படுகின்றனர். நமது கோட்டாறு மறைமாவட்டத்தில் உள்ள தொழிலாளர்களை இயக்கமாகக் கட்டியெழுப்பும் தேவை உணரப்பட்டு தொழிலாளர் பணிக்குழு, கிறிஸ்தவத் தொழிலாளர் இயக்கம் ஆகியவை உருவாக்கப்பட்டன.

ஒவ்வொரு பங்கிலும் உள்ள தொழிலாளர்களை இயக்கமாக ஒருங்கிணைப்பது, அரசின் திட்டங்கள், வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்வை வழங்குவது, தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்து அரசின் நலத்திட்டங்களையும் இழப்பீடுகளையும் பெற உதவுவது, சுயதொழில் பயிற்சிகளை ஏற்பாடு செய்வது, வெளிநாடுகளிலும் வெளியூர்களிலும் உள்ள தொழிலாளர்களை ஒருங்கிணைப்பது, போதைக்கு அடிமையாகும் தொழிலாளர்களை இனங்கண்டு நலம்பெற வழிகாட்டுவது, தொழிலாளர்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது போன்ற பல்வேறு பணிகளைத் தொழிலாளர் பணிக்குழு நமது மறைமாவட்டத்தில் செய்து வருவதை உளமார பாராட்டுகின்றேன்.

நமது பங்குகளில் தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதையும், தொழிலாளர் நலத் திட்டங்களை உருவாக்குவதையும், தொழிலாளர்களை மதிப்போடும் மாண்போடும் நடத்துவதையும், உழைப்பிற்கான கூலியைக் காலம் தாழ்த்தாமல் வழங்குவதையும் உறுதிசெய்வோம். உழைப்பினால் நல்லதோர் உலகம் செய்வோம். “இராப் பகலாய் பாடுபட்டு உழைத்தோம்” (2 தெச 3:8) என்னும் பவுலடியாரின் கூற்றுக்கிணங்க, உழைப்பினால் உலகை உருவாக்கும் உழைப்பாளர்கள் அனைவரையும் இறைவன் ஆசி வழங்கிக் காப்பாராக! அனைவருக்கும் மே நாள் வாழ்த்துகள்!

கிறிஸ்துவின் மனநிலையில்
Sd/-
**+ ஆயர் நசரேன் சூசை**